ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 12,099 — 1960 අප්‍රේල් 1 වැනි සිකුරාද — 1.4.1960

12,099 ம் இலக்கம் — 1960 ம் ஆண்டு ஏப்றில் மாதம் 1 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I: தொகுதி (II)—விளம்பரங்கள்

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவைசெய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளது.]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள்—வெற்றிடம் .. .. .. | 81 | ஆய விற்பனையும் குத்தகை விற்பனையும் .. .. | — |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் .. | — | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் .. | — |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் .. | 82 | அந்நியகுடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் .. | — |
| கேள்விப்பத்திர முடிவுகள்பற்றிய அறிவித்தல்கள் .. | — | ஏல விற்பனைகள் .. .. .. | — |
| பொருட்கள் விற்பனையும், பிறவும் .. .. | — | நாணயவிதம் .. .. .. | — |


## பதவிகள்—வெற்றிடம்

### வித்தியா பகுதி

#### அரசினர் பாடசாலைகளில் கீழைத்தேய சங்கீத, நடன ஆசிரியர் பதவிகள்

அரசினர் பாடசாலைகளில் கீழைத்தேய சங்கீத, நடன ஆசிரியர் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் கீழ்க்காணும் மாதிரிப் பத்திர முறையில் தயாரிக்கப்பட்டு 1960 ம் ஆண்டு ஏப்றில் மாதம் 15 ந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக " வித்தியாதிபதி (GE கிளை), வித்தியா பகுதி, மலாய் வீதி, கொழும்பு 2 " என்ற விலாசத்துக்கு அனுப்பப்பட வேண்டும்.

2. குறித்த பதவிகளுக்குரிய சம்பள விகிதங்கள் பின்வருமாறு :—

(அ) இந்தியாவிலுள்ள யாதேனும் சர்வகலாசாலையின் அல்லது அங்கீகரிக்கப்பட்ட ஸ்தாபனத்தின் டிப்ளோமா பத்திரம் அல்லது தராதரப் பத்திரம் பெற்றவர்களுக்கும் இலங்கை அரசினர் நுண்கலைக் கல்லூரியில் சங்கீதத்தில் ஆறு வருடப் பொது வகுப்பைச் சித்திகரமாகப் பூர்த்தி செய்தவர்களுக்கும் : ரூ. 1920—10 × 72—5 × 120—ரூ. 3,240.

(ஆ) இலங்கை காந்தர்வ சபையின் அல்லது வட இலங்கைக் கீழைத்தேய சங்கீதச் சபையின் இறுதித் தராதரப் பத்திரம் (4 வருட வகுப்பு) அல்லது இலங்கை நுண்கலைக் கல்லூரியின் சங்கீத/ நடன அல்லது சங்கீத, நடன நடுநிலைத் தராதரப் பத்திரம் அல்லது ஒரு சர்வகலாசாலையின் அல்லது அங்கீகரிக்கப்பட்ட ஸ்தாபனத்தின் டிப்ளோமா பத்திர நடுநிலைத் தராதரப் பத்திரம் பெற்றவர்களுக்கு : ரூ. 1,344—17 × 72—ரூ. 2,568.

(இ) மேற்போந்த (அ) ம், (ஆ) ம் பந்திகளில் குறிப்பிட்டுள்ள தராதரங்களைப் பெற்றிராதும் சங்கீதத்தில் அல்லது நடனத்தில் அல்லது இரண்டிலும் நியாயமான அளவு அறிவு பெற்றுள்ளவர்களுக்கு ரூ. 918—13 × 42—ரூ. 1,464.

3. நியமன நியதிகள் :

(i) மேற்போந்த (அ) ம், (ஆ) ம் தொகுதிகளின் கீழ் நியமிக்கப்படுவோர், வேண்டிய நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யுமிடத்து, இளைப்பாற்றுச் சம்பள உரித்துடைய பதவிகளை வகிப்பவராகக் கருதப்படுவர். அவர்கள் பாடசாலை ஆசிரியர் இளைப்பாற்றுச் சம்பளத் திட்டத்தின் கீழுள்ள நிதிக்கும் ஆசிரியர் கைம்பெண் அனுதை இளைப்பாற்றுச் சம்பள நிதிக்கும் கட்டணம் செலுத்தும்படி கேட்கப்படுவர்.

(ii) இளைப்பாற்றுச் சம்பள உரித்துடைய பதவிகளுக்குச் செய்யப்படும் நியமனங்கள் 3 வருட காலத்துக்கு தகுதிகாண் முறையில் அமையும்.

4. வேண்டிய தகைமைகள் :

(i) மேற்போந்த 2 ம் பந்தியிற் குறிப்பிட்டுள்ளவாறு ;

(ii) விண்ணப்பகாரர்கள் 1960 ம் ஆண்டு ஜனவரி மாதம் 1 ந் திகதியன்று 18 வயதுக்குட்படாதவர்களாகவும் 45 வயதுக்கு மேற்படாதவர்களாகவும் இருத்தல் வேண்டும். அரசினர் சேவையிலுள்ளவர்களுக்கு இவ்வயதுக் கட்டுப்பாட்டின் உயர்ந்த படி அமையாது ;

(iii) அவர்கள் சிங்களத்தில் அல்லது தமிழில் சிறந்த அறிவு பெற்றிருத்தல் வேண்டும் ;

(iv) அவர்கள் நன்னடத்தை உள்ளவர்களாகவும் சுகதேகிகளாகவும் இருத்தல் வேண்டும்.

5. அவர்கள் தமது விண்ணப்பங்களுடன் கீழேயுள்ளவற்றின் பிரதிகளை—மூலப்பத்திரங்களையல்ல—சேர்த்தனுப்பவேண்டும்.

(i) பிறப்புப் பதிவுச் சாட்சிப் பத்திரம் (ஞானஸ்நானப் பத்திரம் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளின் ஒழுங்குச் சட்டத்தின் நோக்கத்துக்காகக் கொடுபடும் பத்திரம் ஏற்கப்பட மாட்டாது) ;

(ii) கல்வித் தராதரப் பத்திரங்களும் தொழிற் தராதரப் பத்திரங்களும் ;

(iii) சமீபகாலத்தில் பெற்ற இரண்டு நற்சாட்சிப் பத்திரங்கள் (அரசினர் சேவையிலுள்ள வர்கள் இவற்றை அனுப்பவேண்டியதில்லை.)

(iv) சிங்களத்தில் அல்லது தமிழில் விண்ணப்பக்காரன் பெற்றுள்ள அறிவுக்கு அத்தாட்சியாகத் தகுதிவாய்ந்த ஒருவரிடமிருந்து பெற்ற ஒரு பத்திரம் அல்லது யாதேனும் சாதனப் பத்திரம்.

அரசினர் சேவையிலுள்ளவர்கள் நற்சாட்சிப் பத்திரங்களை அனுப்புவதில் மட்டும் இருந்தே விதிவிலக்கு அளிக்கப்படுகின்றனர் என்றும் கோரப்படும் ஏனைய பத்திரங்களின் பிரதிகளை அவர்களும் அனுப்ப வேண்டும் என்றும் கவனிக்கவும்.

6. உதவி நன்கொடை பெறும் பாடசாலை ஆசிரியர்கள் தமது விண்ணப்பங்களை முகாமைக்காரருக்கூடாக அனுப்பவேண்டும். அத்தகைய விண்ணப்பக்காரர் தெரிவு செய்யப்படின் அவர்களைப் பாடசாலையிலிருந்து விலகவிடமுடியுமாவென முகாமைக்காரர்கள் அவர்களின் விண்ணப்பங்களில் குறிப்பிடவேண்டும். வேலைக்கமர்த்தியிருப்பவருக்கூடாக அனுப்பப்படாத அல்லது விதிக்கப்பட்ட மாதிரிப் பத்திர முறையில் தயாரிக்கப்படாத விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா. கீழ்க்காணும் மாதிரிப் பத்திரத்தைப் பார்த்து விண்ணப்பப் பத்திரம் பிரதி செய்யப்பட வேண்டும். அச்சடிக்கப்பட்ட விண்ணப்பப் பத்திரங்கள் கிடையா. இக் கந்தோரிலுள்ள எவ்வுத்தியோகத்தர் பெயருக்கும் விண்ணப்பங்கள் அனுப்பப்படலாகா.

7. இப்பதவிகள் இங்கு விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு அமைவதுடன் இக் " கசெற் " பத்திரத்தின் I ம் பகுதி II ம் பிரிவின் முற்பகுதியில் கொடுபட்டுள்ள பகிரங்க சேவை நியமனங்களுக்கான பொதுநிபந்தனைகளுக்கு அமைவாகவும் இருக்கும்.

எஸ். எவ். டி சில்வா,
வித்தியாதிபதி.

வித்தியா பகுதி,
மலாய் வீதி, கொழும்பு 2,
1960 ம் ஆண்டு மார்ச்சு மீ 15 ந உ.

## மாதிரிப் பத்திரம்

**அரசினர் பாடசாலைகளில் கீழைத்தேய சங்கித, நடன ஆசிரியர் பதவிகள்**

1. முழுப் பெயர் : ————.
 (தடித்த எழுத்தில் தெளிவாக எழுதவும்).
2. விலாசம் : ————.
3. பின்வருவோரின் பிறந்த இடம் :
 (அ) விண்ணப்பகாரன் : ————.
 (ஆ) விண்ணப்பகாரனின் தகப்பன் : ————.
 (இ) விண்ணப்பகாரனின் தகப்பன் வழிப்பாட்டன் :————
 (ஈ) விண்ணப்பகாரனின் தகப்பன் வழிக்கொப்பாட்டன் : ————.
4. விண்ணப்பகாரன் பிறந்த திகதியும் 1960 ம் ஆண்டு ஜனுவரி மாதம் 1 ம் திகதி உள்ளபடி வயதும் : ————.
5. (அ) விண்ணப்பகாரனின் சாகியம் :————.
 (ஆ) இலங்கைப் பிரசையாயின் பிரசாவுரிமை வழியிலா அல்லது வம்சஎ வழியிலா ஏனக் குறிப்பிட்வும் :————.
6. தற்போதைய உத்தியோகம் விப்ரங்களுடன் : ————.
 (அசிரியராயின், பாடசாலைப் பெயர், பதிவு இலக்கம், தற்போதைய வருடாந்தச் சம்பளம், சம்பள் விகிதம் ஆகியவற்றைக் குறிப்பிடவும்.)
7. கல்வித் தராதரங்கள் :————.
8. கீழைத்தேய சங்கீதத்தில் அல்லது நடனத்தில் அல்லது இரண்டிலும் பெற்றுள்ள தராதரங்கள் :————.
9. படிப்பித்தலில் பெற்றுள்ள அனுபவம் (இருப்பின்) :————.
 (சேவைக்காலத்தை விபரமாகவும், பாடசாலை ஒவ்வொன்றிலுமிருந்து விலகிய காரணத்தையும் குறிப்பிடவும்)
10. சிங்களத்தில்/தமிழில் பெற்றுள்ள அறிவு அல்லது சிங்களத்தில்/தமிழில் சித்தியெய்திய வகுப்பு : ————.
11. வேறு யாதேனும் தராதரங்கள் : ————.
12. நற்சாட்சிப் பத்திரங்கள் கொடுப்பவர்களின் பெயர்கள் :————.

————,
விண்ணப்பகாரனின் கையொப்பம்.

திகதி : ————.

மு.கு.—விண்ணப்ப் பத்திரங்களை அனுப்பும் காகித உறைகளின் இடதுபக்க மேல் மூலையில் " கீழைத்தேய சங்கீத, நடன ஆசிரியர் பதவிகள் " என அடையாளமிடவும்.

---

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

## நீர்ப்பாசன இலாகா

வடபகுதி வவுனியா பெரும்பாக நீர்ப்பாசன இஞ்ஜினியரால் கீழ்க்காணும் வேலைக்காகிய விண்ணப்பப் பத்திரங்கள் இவ்வருடத்தய ஏப்றில் மாதம் 19 ந் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணி வரையும் நீர்ப்பாசன இலாகாவில் ரூபா 9,000 க்கும் அதற்கு மேற்பட்ட தொகைக்கும் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களிடமிருந்து ஏற்றுக்கொள்ளப்படும்.

| வேலையின் பெயர் | கேள்விப் பத்திரத்திற்குரிய கட்டுப் பணம் ரூ. ச. | இலாகாவினுல் இனுமாகக் கொடுக்கப் படும் வேலைக் காகிய பொருட்கள் |
|---|---|---|
| மணியர் குளத்தை திருத்தஞ் செய்தல் | 25 00 | .. சீமந்து மட்டும் |

2. விண்ணப்பப் பத்திரங்கள் இவ்வருடத்தய ஏப்றில் மாதம் 18ந் தேதி திங்கட்கிழமை வரையும் வவுனியாப் பகுதி நீர்ப்பாசன இஞ்ஜினியரின் காரியாலயத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம். மற்றும் ஏனைய விபரங் கட்கு காரியாலயத்திற்கு நேர் முகமாக வந்தோ அல்லது மனுச் செய்தோ கோரவும்.

3. தற்சமயம் அரசாங்க ஒப்பந்தங்கள் கைவசம் இருப்பின் சம்பந்தப் பட்ட உத்தியோகத்தரிடமிருந்து அவ்வேலைகள் திருப்திகரமாகச் செய்யப் படுகிறதென்று அத்துடன், வேலைகளின் பெயரும் ஒப்பந்தங்களின் தொகையும் மேற் கூறிய வேலைக்கு விண்ணப்பிக்கும் பொழுது ஒரு அத்தாட்சிப் பத்திரம் சமர்ப்பிப்பதுடன் மேலும் இவ்வத்தாட்சிப் பத்திரத் தில் குறிப்பிடாதவேறு வேலைகளெதுவுங் கைவசமில்லையென்றும் அத் தாட்சிப்படுத்தவேண்டும்.

வி. பாலசுப்பிரமணியம்,
நீர்ப்பாசன இஞ்ஜினியர்,
வவுனியாப் பகுதி.

1960 ம் ஞு மார்ச்சு மீ 25 ந உ.

---

## உணவுப் பகுதி

**கோரிக்கை விளம்பரம்**

1960 ம் ஆண்டு மே மாதம் 1 ந் திகதி தொடக்கம் 1960 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 30 ந் திகதி வரைக்குமுள்ளான காலத்தில் கீழ்க் காணும் சேவை புரிவதற்கான கோரிக்கைகள் உணவு, வர்த்தக, வியாபார அமைச்சின் (உணவு, சந்தைப்படுத்தல், கூட்டுறவுப்பிரிவின்) கோரிக்கை சபைத்தலைவரால் த. பெ. இலக்கம் 569, யூனியன் பிளேஸ், கொழும்பு என்னும் விலாசத்தில் 1960 ம் ஆண்டு ஏப்றில் மாதம் 22 ந் திகதி வெள்ளிக்கிழமை பி. ப. 2 30 மணிவரைக்கும் ஏற்றுக்கொள்ளப்படும்.

சேவை : குருணுகல் மாவட்டக் களஞ்சியத்திலிருந்து கண்டியிலுள்ள பண்டசாலைகளுக்கும், றம்புக்கனையிலுள்ள விநியோக பண்ட சாலைகளுக்கும் உணவுப்பொருட்கள் எடுத்துச் செல்லல்.

1960 ம் ஆண்டு ஏப்றில் மாதம் 22 ந் திகதி வெள்ளிக் கிழமை நண்பகல் 12 மணிவரைக்கும் 330, யூனியன் பிளேஸ், கொழும்பிலுள்ள உணவு அதிகாரியின் பெறக்கூடிய விண்ணப் பப் பத்திரத்தில் (இரு பிரதிகளில்) விண்ணப்பம் செய்யப்படவேண்டும். உணவு அதிகாரியிடம் தங்குபணமாக ரூ. 100 கொடுத்துப்பெற்ற பற்றுச் சீட்டைக் காண்பித்தும், உணவு அதிகாரியின் காரியாலயத்தில் பெறக் கூடிய விபரங்களடங்கிய பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள அங்கம் 4 (II) (III) ஆகியவையை நிவிர்த்தி செய்வதன் மூலமும் கோரிக்கைப் பத்திரங்கள் பெற்றுக்கொள்ளலாம். மற்றும் தேவையான விபரங்கள் உணவு அதிகாரியின் காரியாலயத்திலிருந்து அறிந்துகொள்ளலாம்.

கே. எம். டீ. ஜயனெத்தி,
உணவு அதிகாரி.

330, யூனியன் பிளேஸ், கொழும்பு 2,
1960 ம் ஆண்டு மார்ச்சு மீ 25 ந் திகதி.

---

## வித்தியா பகுதி

**சமீப காலத்தில் தரம் உயர்த்தப்பட்ட தமிழ் முஸ்லிம் பாடசாலைகளுக்கு நூல்நிலையப் புத்தகங்கள் விநியோகஞ் செய்தற்கான கேள்விப் பத்திரங்கள்—1959/60**

தரம் உயர்த்தப்பட்ட தமிழ் முஸ்லிம் பாடசாலைகளுக்கு நூல்நிலையப் புத்தகங்கள் விநியோகஞ் செய்தற்கான கேள்விப் பத்திரங்கள் கொழும்பு 2, மலாய் வீதியிலுள்ள வித்தியா பகுதிக் கேள்விச் சபைத் தலைவரால் 1960 ம் ஆண்டு ஏப்றில் மாதம் 22 ந் திகதி வெள்ளிக் கிழமை, பி.ப. 2.30 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

2. கேள்விப் பத்திரங்களை அனுப்ப விரும்புவோர் " வித்தியாதிபதி, விநியோகக் கிளை,. மலாய் வீதி, கொழும்பு 2" என்ற விலாசத்துக்கு விண்ணப்பஞ் செய்து வேண்டிய விபரங்களை இலவசமாய்ப் பெற்றுக் கொள்ளலாம்.

3. கேள்விப் பத்திரங்களை அனுப்ப விரும்புவோரில் கொழும்பி லுள்ளவர்கள் கொழும்பு 2, மலாய் வீதியிலுள்ள வித்தியா கந்தோரின் கணக்குக் கிளையிலும், கொழும்புக்கு வெளியேயுள்ளவர்கள் ஆங்காங் குள்ள கச்சேரியிலும் ரூபா 100 கட்டியதாகப் பற்றுச்சீட்டைக் காட்டி, 1960 ம் ஆண்டு ஏப்றில் மாதம் 21 ந் திகதிவரை சாதாரண வேலை நேரத்தில் கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

எல். டீ. எஸ். கருணரத்ன,
வித்தியாதிபதிக்காக.

வித்தியா பகுதி,
மலாய் வீதி, கொழும்பு 2,
1960 ம் ஞு மார்ச்சு மீ 28 ந உ.

---

## விளம்பரம்

1960 ம் ஆண்டு சித்திரை (ஏப்றில்) மாதம் 13 ந் திகதி புதன்கிழமையும், 15 ந் திகதி வெள்ளிக் கிழமையும் அரசாங்க விடுமுறை நாட்களாகவிருப்பதால், 1960 ம் ஆண்டு சித்திரை (ஏப்றில்) மாதத்தின் மூன்றும் வாரத்திற்குரிய இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை 1960 ம் ஆண்டு சித்திரை (ஏப்றில்) மாதம் 14 ந் திகதி வியாழக்கிழமை பிரசுரிக்கப்படுமெனவும், அப்பத்திரிகையில் பிரசுரிக்கப்பட வேண்டிய சகல விளம்பரங்களும் அறிவித்தல்களும் 1960 ம் ஆண்டு சித்திரை (ஏப்றில்) மாதம் 8 ந் திகதி வெள்ளிக்கிழமை பி. ப. 4 மணிக்கு முன்னர் அரசாங்க அச்சகத்திற்கு வந்துசேரவேண்டு மெனவும் இத்தால் தெரிவிக்கப்படுகின்றது.

பேர்ஞர்ட் த சில்வா,
அரசாங்க அச்சகத் தலைவர்.

அரசாங்க அச்சகம்,
கொழும்பு,
1960 ம் ஆண்டு பங்குனி (மார்ச்சு) மாதம் 15 ந் திகதி.

**1955 ம் ஆண்டு (ஜனவரி) தை மாதம் 1 ந் திகதி தொடக்கம் அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய திருத்தப்பட்ட கிரய விகிதங்கள்**

# " இலங்கை அரசாங்க வர்த்தமானி (கெசற்) "

**வெள்ளிக்கிழமைதோறும் வெளியிடப்படுவது**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் **விளம்பரதாரர்களே பொறுப்பாளராவர்.**

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன், **அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு,** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. கிழமை நாட்களில் மு. ப. 9 மணி முதல் பி. ப. 4.30 மணி வரையும், சனிக்கிழமைகளில் மு. ப. 9 மணி முதல் பி. ப. 1 மணி வரையும் காரியாலய நேரமாகும்.

4. கிழமை நாட்களில் பி. ப. 3.30 மணிக்கும், சனிக்கிழமைகளில் நண்பகல் 12 மணிக்கும் பணங் கொடுக்கல் வாங்கல் முடிவுறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகனின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும்.

6. " நகலை " கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் எழுதுதல் விசேஷமாக " ரைப் " அடித்தல் பிழைகளையும், காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும்.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும், பெயர் மாற்றம்பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுபடவேண்டிய விளம்பரங்கள் " சுப்பிறீம் கோட் புறெக்ரசல் " கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப் படமாட்டா.

10. **1955 ம் ஆண்டு (ஜனவரி) தை மாதம் 1 ந் திகதி** தொடக்கம் அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் பின்வருமாறு :—

| | ரூ. | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய .. .. | 10 | 0 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலம் அல்லது அதன் பகுதி .. | 5 | 0 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் ½ பக்கம் .. | 60 | 0 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் .. | 120 | 0 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமைதோறும் இலங்கை அரசாங்க வர்த்தமானி வெளியிடப்படும்.** அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **வெளியாவதற்கு நான்கு வேலை நாட்களுக்கு முன் பி. ப. 3.30 மணிக்குள் (சாதாரணமாக திங்கட்கிழமை பி. ப. 3.30 மணி)** அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு, அவர்கட்கு சகல அறிவித்தல்களும், விளம்பரங்களும் வந்துசேரவேண்டும்.

13. **ஒரு வருடத்திற்கு அல்லது அரை வருடத்திற்குரிய சந்தா, முன்பணமாக கொழும்பு, அரசாங்கப் பிரசுர நிலைய அதிபரால் பதிவு செய்யப்படும்.**

14. **சந்தா விகிதங்கள்—**

| | ரூ. | ச. | |
|---|---|---|---|
| ஒரு வருட சந்தா .. .. | 15 | 0 | .. ஒவ்வொரு பகுதிக்கும் |
| | 7 | 0 | .. ஓராம் பகுதியின் ஒவ்வொரு பிரிவுக்கும் |
| ஒவ்வொரு பகுதியினதும் தனிப் பிரதி .. | 0 | 25 | |
| | 0 | 31 | .. தபாற் செலவுடன் |
| ஓராம் பகுதியின் ஒவ்வொரு பிரிவும் .. | 0 | 10 | |
| | 0 | 14 | .. தபாற் செலவுடன் |

15. கைவசமுள்ள பழைய பிரதிகளுக்கு இரட்டிப்புப் பணம் செலுத்தப்படல் வேண்டும். **கொழும்பு, அரசாங்கப் பிரசுர நிலைய அதிபர் அவர்கட்கு** விண்ணப்பிக்கவேண்டும்.

இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது